1983 சனவரி 27]

சாத்தூர் தாலூக்காவில் விதை கொள்முதல் செய்யும் திட்டம்.

*வினா எண். 8 திரு. சோ. அழகர்சாமி; மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விதைக் கொள்முதல் அதிகாரிகள் இராமநாதபுரம் மாவட்டம் சாத்தூர் தாலுகாவில் விவசாயிகளிடம் நேரடியாக கொள்முதல் செய்யாமல் வியாபாரிகளிடம் வாங்குகிறார்கள் என்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில் உற்பத்தி செய்யும் விவசாயிகளிடம் நேரடியாக கொள்முதல் செய்ய சீரான திட்டம் வகுக்கப் படுமா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:—

(அ) மற்றும் (ஆ): பருத்தி விதைகள் மட்டும், நியமனம் செய்யப்பட்ட வியாபாரிகள் மூலம் கொள்முதல் செய்யப்படு கின்றது. மற்ற விதைகளை விவசாயிகளிடமிருந்து நேரிடை யாகவே கொள்முதல் செய்யப்படுகிறது.

பருத்தி விவசாயம் செய்யும் விவசாயிகள் தங்கள் வசம் இருக்கும் பருத்தியை அரைத்து விதைகளை மட்டும் விவசாயத் துறைக்கு கொள்முதலுக்கு வழங்க முன்வருவதில்லை. எனவே நியமனம் செய்யப்பட்ட வியாபாரிகள் மூலம் பருத்தியை அரைத்து விதையை மட்டும் அவர்களிடமிருந்து துறை வாங்குகிறது.

(முற்பகல் 9.40)

திரு. சோ. அழகர்சாமி: கடந்த ஆண்டு இந்த மாதிரி விவசாயி களால் புகார் அந்த வட்டாரத்திலே கூறப்பட்டிருக்கிறது. பருத்தி விதைமட்டுமல்ல, வேறு விதைகளும் அப்படித்தான். ஆகவே கூடுமானவரையில் விவசாயிகளுக்கு வேண்டிய விதைகளை அரசாங்கப் பண்ணையில் உற்பத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதோடு அது போதாமல் வாங்கவேண்டு மானால் விவசாயிகளிடமிருந்து நேரடியாக கொள்முதல் செய்ய வேண்டுமென்ற உத்திரவை அமைச்சர் அவர்கள் பிறப்பிப்பார் களா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: இருக்கிற விதிமுறைகள் அப்படித்தான். பருத்தியைத்தவிர, மற்ற விதைகளை நேரடி யாக வாங்வேண்டும் என்பதுதான். ஆகவே அந்த விதியை நிச்சயமாக அரசு அமல்படுத்தும்.

தஞ்சை மாவட்டத்தில் கோடைக்காலத்தில் பருத்தி பயிரிடும் திட்டம்.

*வினா எண் 9 திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா.—

(அ) தஞ்சை மாவட்டத்தில் நெல் பயிரிடும் நிலங்களில் கோடை காலத்தில் பருத்தி பயிரிடும் திட்டம் அரசு பரிசீலனை யில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரமென்ன?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: (அ&ஆ) தஞ்சை மாவட்டத்துக்கு தனியாக இல்லை. ஆனால் ஒருங்கிணைந்த பருத்தி பெருக்கத் திட்டத்தின்கீழ் தஞ்சை மாவட்டத்தில் நெல் தரிசுகளில் பருத்தி சாகுபடி செய்யப்படுகிறது.

திரு. பெ. சு. திருவேங்கடம்: தலைவர் அவர்களே, இந்த பருத்தி ஒருங்கிணைந்த திட்டத்தில் தஞ்சை மாவட்டம் மட்டுமல்லாது வேறு மாவட்டங்களும் இணைக்கப்பட்டிருக் கிறதா? அப்படி பருத்தி பயிரிடுகின்ற விவசாயிகளுக்கு இலாகா மூலமாக என்ன என்ன உதவிகள் வழங்கப்படுகின்றன என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: அவர்கள் போட்டிருக்கிற மூலக் கேள்வி தஞ்சை மாவட்டத்தைப் பற்றியது. இந்தத் திட்டத்தில் 1981-82, 1982-83 ஆம் ஆண்டுகளில் இந்த பருத்தி தீவிர சாகுபடித் திட்டம் அமல் நடத்தப்படுகிறது என்பதை யொட்டி அதனுடைய பரப்பளவு அதிகமாகி இருக்கிறது என்ற புள்ளிவிவரம் என்னிடத்திலே இருக்கிறது, ஒருங்கிணைந்த பருத்திப் பெருக்கத் திட்டம் மாநிலம் முழுவதற்கும் உரியது. அதன் அடிப்படையில் செய்யப்படுகிற உதவிகளைப் பொறுத்த வரையில் தனிக் கேள்வியாகப் போட்டால் எடுத்துச் சொல்ல இயலும்.

திரு. ந. சிவஞானம்: தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் நெல்லுக்கு மாற்றுப் பயிராக வறட்சிக் காலத் திலே மல்பெரி சீட்ஸ் உற்பத்தி செய்வதை அரசாங்கம் ஊக்குவிக்குமா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: கேள்வி பருத்தியைப் பற்றியது.

திரு. பொ. உத்திராபதி: தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்திலே ஒவ்வொரு ஆண்டும் நெல் விளைச்சல் பாதிக்கப்படுவதால் ஒரு நிரந்தரமான மாற்றுத் திட்டத் தோடு பருத்தி உற்பத்தி செய்வதற்கு விவசாயிகளுக்கு உதவி செய்வதற்கு அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: இத்தகைய உற்சாகத்தின் மூலமாக 1981-82 ஆம் ஆண்டில் 'எம். சி. யு. 7' என்ற ரக பருத்தி 4,636 எக்டேர் பரப்பில் சாகுபடி செய்யப்பட்டது. 1982-83 ஆம் ஆண்டில் 'எம். சி. யு. 7' ரக பருத்தி 7,000 எக்டேர் பரப்பளவிலும் சாகுபடி செய்ய அரசு உத்தரவிட்டிருக் கிறது. அந்தப் பரப்பளவை அதிகரிக்க அரசு முயற்சி செய்யும்.

திரு. இரெ. இராசமாணிக்கம்: தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்திலே பருத்தி சாகுபடி செய்வதற்கு எந்த எந்த ரகத்தை அரசு சிபாரிசு செய்திருக்கிறது? தஞ்சை மாவட்டத் திலே பருத்தி சாகுபடி செய்வதற்குத் தனியாக மானியம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

1983 ஜனவரி 27]

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து தலைவர் அவர்களே, எம். சி. 7 பருத்தி இரகத்தை சிபாரிசு செய்திருக்கிறது. தனியே மானியம் வழங்கும் உத்தேசம் இல்லை.

தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் எடுக்கப்பட்ட ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஒதுக்கப்பட்ட தொகை.

* வினா எண் 10—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1980–1981-ம் ஆண்டு தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் எடுக்கப்பட்ட ஊராட்சி ஒன்றியம் ஒவ்வொன்றிற்கும் எவ்வளவு பணம் ஒதுக்கப்பட்டது?

(ஆ) 1981-1982-ம் ஆண்டில் வந்த ஒன்றியங்கள் ஒவ்வொன்றிற்கும் எவ்வளவு பணம் ஒதுக்கப்பட்டது?

(இ) ஒதுக்கப்பட்ட குறியீட்டுப் பணம் அண்மையில் குறைக்கப்பட்டுள்ளதா?

(ஈ) இது பற்றிய விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு தலைவர் அவர்களே, 1980-81 ஆம் ஆண்டில் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் 69 ஊராட்சி ஒன்றியங்கள் எடுக்கப்பட்டு, ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் சராசரியாக சுமார் ரூபாய் 35 இலட்சம் ஒதுக்கப்பட்டது.

(ஆ) 1981—82 ஆம் ஆண்டில் 150 ஊராட்சி ஒன்றியங்கள் எடுக்கப்பட்டு, ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் சுமாராக 40 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டது.

(இ) இல்லை.

(ஈ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, 1981-82 ஆம் ஆண்டுகளில் முதலில் சராசரியாக 40 இலட்சம் ரூபாய் என்ற அளவில் ஒதுக்கப்பட்டது. அதற்கு பிறகு இரண்டு இலட்சம், மூன்று இலட்சம் என்று சில பஞ்சாயத்து யூனியன்களில் வெட்டப்பட்டுவிட்டதன் காரணமாக பல வேலைகள் அப்படியே கிடந்து விட்டன. என்பதாக அரசாங்கத்திற்கு புகார் வந்திருக்கிறதா? அப்படியானால் அதில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன? குறிப்பாக கடையம் ஊராட்சி ஒன்றியத்தில், இதன் காரணமாக 4, 5 பல வேலைகள் நிறைவேற்றப்படாமல், நிறுத்தப்பட்டிருப்பதை அரசு அறியுமா அவை நிறைவேற்றப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS